பயன்படுத்தி 6 மணி நேரம் 8 மணி நேரம் என்று பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தனி ஆர்டர் பெற்றுக்கொண்டுவந்து ஒரு மணி நேரத்திற்கு இவ்வளவு வாடகை என்று கொடுத்துவிட்டு சம்பாதிக்கலாம் என்ற முறை இருக்கிறது. மதுரையிலே ஓரளவிற்கு வெற்றியும் இதிலே கிடைத்து இருக்கிறது. அவர்கள் 100, 200, 300 ரூபாய் வரைகூட சம்பாதிக்கிறார்கள். அரசாங்க நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பயிற்சி பெற்றவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : சார், அக்ரிகல்சுரல் யுனிவர்சிடி அமைக்கும்பொழுது அதிலே ஒரு பாலிடெக்னிக் அமைப்பதற்காகத் திட்டம் இருந்ததே. இப்பொழுது இருக்கிற பாலிடெக்னிக்குகளில் நடைமுறையில் சிக்கல்கள், வருவாய், ஸ்டூடன்ஸ் குறைவாக வருதல் போன்றவை எல்லாம் இருப்பதால் அக்ரிகல்சுரல் யுனிவர்சிடி ஆரம்பிக்கும் யோசனையை மறுபரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிலைமையை ஆராய்ந்துதான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. கா. காளிமுத்து : தொழில் கல்விக்கு என தனிப் பல்கலைக்கழகம் நிறுவிடும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைத்தான் மத்திய அரசிடம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். யு.ஜி.சி. யினுடைய அனுமதியை அரசு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

டைட்டிஷியன்கள்.

*334 வினா—**திரு என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவ மனைகளில் எந்தெந்த இடங்களில் "டைட்டிஷியன்கள்" நியமிக்கப்பட்டுள்ளனர்?

(இ) அவர்களின் பணி யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) (1) அரசு பொது மருத்துவமனை, சென்னை.

1974 மார்ச் 9]

(2) அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.

(3) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.

(4) அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.

(5) திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.

(6) கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சென்னை.

(7) அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை.

(8) தொழிலாளர் நல மருத்துவமனை, சென்னை.

(9) தொழிலாளர் நல மருத்துவமனை, கோயம்புத்தூர்.

(இ) மருத்துவமனையில் உள்ள பொதுச் சமையல் கூடத்திலும், சிறப்பு சமையல் கூடத்திலும் நோயினருக்கு முறையானதும் சுகாதாரத்தோடும் கூடிய நல்ல உணவு தயார் செய்வதற்கு டைட்டிஷியன் மிகவும் பொறுப்பானவர்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்பொழுது 'டைட்டிஷியன்கள்' சுகாதாரமான முறையிலே நல்ல உணவு வழங்கப்படுவதைப் பார்த்துக் கொள்வதற்கான பொறுப்பு உடையவர்கள் என்று சொன்னார்கள். ஆனால் பெரும்பாலான மருத்துவமனைகளில் உணவு அளிக்கும் முறை சுகாதாரமானதாக இல்லை. உணவை எடுத்துக்கொண்டு சென்று நோயாளிகளுக்கு விநியோகிக்கும் நேரத்தில் திறந்தபடி எடுத்துக்கொண்டு போவதால் ஈக்கள் மொய்த்து சுகாதாரத்திற்குக் கேடாக இருக்கிறது. இதனால் 'டைட்டிஷியன்கள்' நியமிக்கப்படுவதற்கான நோக்கம் கெட்டுவிடுகிறது. அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த 'டைட்டிஷியன்கள்' என்ற பொறுப்பு எல்லா மருத்துவமனைகளுக்கும் இல்லை. குறிப்பிடத்தக்க பெரிய மருத்துவமனைகளிலே மட்டும் இப்படிப்பட்டவர்கள் 9 இடங்களிலே அமைக்கப்பட்டிருக்கிறார்கள். மிச்சம் நூற்றுக்கணக்கான மருத்துவமனைகள் இருக்கின்றன. பொதுவாகவே மருத்துவமனை அதிகாரி, அங்கேயுள்ள மருத்துவமனைத் தலைமை அதிகாரி இதைக் கவனிக்க வேண்டும்,

மற்ற மருத்துவமனைகளில். ஆனால் பெரிய மருத்துவமனைகளில் தலைமை மருத்துவ அதிகாரியே இதைக் கவனிப்பதற்கு நேரம் இல்லாத காரணத்தாலும், ஏராளமான உணவு தயாரிக்க வேண்டியிருப்பதாலும், அந்த உணவின் தரம் கெட்டுவிடாமல் இருப்பதற்காகத் தகுதி படைத்த 'டைட்டிஷியன்கள்' நியமிக்கப்படுகிறார்கள். உணவின் அளவிலேயிருந்து தரம் வரையில் கவனிக்கும் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை அவர்கள் செம்மையாகச் செய்யவில்லை என்று தெரிந்தால் அவருக்கு மேலேயுள்ள கண்காணிப்பாளர் தகுந்த நடவடிக்கை எடுப்பதன்மூலம் அதிகமான பணியை ஆற்றச் செய்ய முடியும். சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட வகையான குறைகள் இருந்து அதைச் சொன்னால் விசாரிப்பதற்கு நிச்சயமாக அரசு முன்வரும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலில் 'டைட்டிஷியன்கள்' பெரியவர்கள் தங்கும் மருத்துவ மனைகளில் இருப்பதாகச் சொன்னார்கள். சென்னையிலேயுள்ள குழந்தைகள் மருத்துவ மனையிலும் இதைப்போன்ற 'டைட்டிஷியன்கள்' அவசியம் தேவை என்று கருதப்படுகிறது. எனவே குழந்தைகள் மருத்துவ மனையிலும், பெண்கள் மருத்துவ மனையிலும் இப்படிப்பட்ட 'டைட்டிஷியன்கள்' எதிர்காலத்திலாவது நியமிக்கப்படுவார்களா? அந்த 'டைட்டிஷியன்களின்' சம்பள விதங்கள் என்ன என்பதையும் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 'டைட்டிஷியன்கள்' என்பது பொதுவாக நோயாளிகளுக்குத் தகுந்த உணவை வகைப்படுத்தித் தரவும், முறைப்படுத்தித் தரவும், அளவு குறையாமல் பார்த்துக் கொள்ளவும், சத்துள்ள உணவாக இருப்பதைப் பார்த்துக் கொள்ளவும் இருப்பதாகும். சிறப்பான நோய்களுக்குச் சிறப்பான வைத்தியம் நடைபெறும் இடங்களில் டைட்டிஷியன்கள் கூட தகுந்த உணவை எல்லா நேரத்திலும் குறிப்பிட முடியாது. ஒவ்வொரு குழந்தைக்குமே அங்கேயுள்ள சிறப்புத் தகுதி பெற்றவர்கள் தான் தகுந்த உணவைக் குறிப்பிட முடியும். ஆகவே, சிறப்பாகக் கவனம் செலுத்த வாய்ப்பிருப்பதால் எதிர்காலத்திலே தேவைப்பட்டால் டைட்டிஷியன்கள் பொறுப்பு அங்கே ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும்.

1974 மார்ச் 9]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இப்பொழுது உணவுப் பொருள்களின் விலை அதிகமாக ஏறிவிட்டதால் நமது அரசாங்க மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்குக் கொடுக்கும் உணவின் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறதே, அது உண்மையா? ஏனென்றால் அதைக் குறைப்பதால் சிரமம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. ஆகவே, அதன் அளவை அதிகரித்துக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அளவு குறைக்கப்படுமேயானால் அதைக் கவனித்து அப்படி ஏன் குறைக்கப்பட்டது என்று விசாரிப்பதற்கு முறை இருக்கிறது. சில இடங்களில் காண்டிராக்டர்கள் முறை தவறி அளவைக் குறைத்துக் கொடுக்கும் நிலை ஏற்பட்டு விசாரணைக்கு வந்திருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அரசாங்க அலுவலிலே உள்ளவர்கள்கூட மற்றவர்களோடு ஒப்பந்தம் பேசிக் குறைத்ததால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் திருட்டுப் போவதால் குறைக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் நோயாளிகளுக்குக் கொடுக்கும் நேரத்தில் இடையிலே பங்கிட்டுக் கொண்டதால் விசாரணைக்கு வரும் நிலைமையிருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகள் எந்தக் குறிப்பிட்ட இடத்திலும் நடைபெற்றவுடன் அது மேலதிகாரிகளுக்குத் தெரிந்து நடவடிக்கை எடுக்கும் நிலையிருந்தால் சீர் செய்ய முடியும். ஆனால் ஒரு மாதம் கழித்து 15 நாட்கள் கழித்து அமைச்சருக்குப் புகார் வருகிறது. ஒரு மாதம் கழித்து விசாரிக்கும்பொழுது அப்பொழுது புகார் கிடைப்பதில்லை. அங்கத்தினர்கள் கூட குறிப்பிட்ட மருத்துவமனையில் புகார் இருந்து அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால் மருத்துவமனை மேலும் செம்மையாக நடைபெற முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அரசாங்க மருத்துவமனைகளில் நியமிக்கப்படும் 'டைட்டிஷியன்'-களுக்கு ஏதாவது பயிற்சி அளிக்கப்படுகிறதா? எந்தத் தகுதியுடையவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, டைட்டிஷியன்கள் என்பதற்காக ஒரு பட்டதாரிப் படிப்பு இருக்கிறது. அந்தத் தகுதி பெற்றவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

[1974 மார்ச் 9

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, மனநோய் மருத்துவமனையில் இருக்கும் நோயாளிகளை மற்ற மருத்துவ மனைகளில் இருக்கும் நோயாளிகளோடு ஒப்பிட இயலாது. அங்கே தனிப்பட்ட துறையிலே அதிகமான டைட்டிஷியன்கள் தேவையாக இருக்கிறது. எனவே அங்கே ஒரு டைட்டிஷியனை அதிகப்படியாகப் போடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்பொழுது ஒருவர் இருக்கிறார். அதற்குமேல் தேவையா என்பது பரிசீலிக்கப் பட வேண்டும்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் உணவை ஒப்பந்தக்காரர்கள் சில நேரங்களில் தவறாகக் குறைத்துக் கொடுப்பதாக அமைச்சரவர்களே ஒப்புக் கொள்ளும் நிலைமை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் சென்னை போன்ற இடத்திலாவது அந்த ஆஸ்பத்திரி யிலே உள்ள அதிகாரி மட்டுமல்லாமல் பொதுவாக ஒரு அதிகாரியைப் போட்டு எல்லா வைத்திய விடுதிகளுக்கும் சர்ப்ரைஸ் விசிட் செய்து செக்கப் செய்யும் நிலையை ஏற்படுத்தினால் இந்தக் குறைபாடு ஓரளவு குறையுமல்லவா? அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்பொழுது இயக்குநரோ, துணை இயக்குநரோ எதிர்பாராத நேரத்தில் பரிசோதனை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக் கிறார்கள். பொதுவாகவே அவர்களுடைய பணி வரம்பு அதிகமாக இருப்பதால் எதிர்பாராத நேரத்தில் செல்வதற்கான வசதி, வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன. அந்த முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

திரு. எ. க. துரைசாமி: தலைவரவர்களே, சத்துணவு என்ற காரணத்தினால் அரசு மருத்துவமனைகளில் உள்ள நோயாளி களுக்குக் கைக்குத்தல் அரிசிச் சோறு வழங்கப்படுகிறது. பெரும் பாலான நோயாளிகள் அதை விரும்பவில்லை அதைக் கருத்திற் கொண்டு அதை மாற்றியமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, எந்த மருத்துவமனையிலாவது அங்குள்ள நோயாளிகள் கைக்குத்தல் அரிசியை விரும்பாவிட்டால் தனியாக மருத்துவத்துறையால்

1974 மார்ச் 9]

பரிசீலிக்கப்பட்டு தேவையான மாற்றம் செய்யப்படுகிறது. அப்படி எந்த இடத்தில் குறைபாடு இருந்தாலும் மாற்றுவதற்கு முயற்சிக்கலாம். ஆனால் உண்மையென்னவென்றால், கைக்குத்தல் அரிசியினால் அதிகமாகப் பயன் கிடைக்கும் என்று கொண்டு வரப் பட்டது. ஆனால் விரும்பத்தகாத அளவில் சிரமமாக இருந்தால், கெடுதலாயிருந்தால் அதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வரும்.

Medical Centre for Kottur-Adyar

* 335 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether any medical centre is to be run at Kottur-Adyar Slum Clearance Colony in Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே,

(அ) அரசின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

ஆனால் வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் மூலமாக அங்கே ஒரு மருந்தகம் நடத்த முயற்சியிருக்கிறது. அதற்கு லயன்ஸ் கிளப் ஒரு கட்டிடம் தர முன் வந்திருக்கிறார்கள் என்று மாநகராட்சி மன்றம் தெரிவித்திருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: சார், காலனிகள் அமைக்கும்போழுதே மருத்துவ மனைகளுக்கான திட்டத்தையும் அதிலே சேர்த்து ப்ளாட் அலாட்மெண்ட் செய்து அமல் நடத்துவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அப்படிப் பட்ட நல்ல எண்ணம் அரசுக்கு உண்டு. அந்த எண்ணத்தை நடை முறைப்படுத்த ஏராளமான நிதி தேவைப்படுகிறது. நிதி கிடைப்பதற்கு அங்கத்தினர்கள் எந்தவிதமான வரியை விதிக்கலாம் என்று இந்தக் கூட்டத் தொடரில் சொன்னால் அதை மேற்கொள்ள முயற்சிக்கலாம்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்